## திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம்

# முரசொலி செல்வம் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைக்கிறார்!

**சென்னை, ஏப். 24-**

**சென்னை - முரசொலி வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலையை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று திறந்து வைக்கிறார். 'முரசொலி' இதழில் முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய 'சிலந்தி' கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறுகிறது.**

அதுபற்றிய விவரம் வருமாறு:-

திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் முரசொலி செல்வம் அவர்களின் சிலை திறப்பு மற்றும் 'சிலந்தி' கட்டுரைகள் நூல் வெளியீட்டு விழா இன்று (24.4.2025 - வியாழன்) மாலை 5 மணியளவில் சென்னை - கோடம்பாக்கம் முரசொலி வளாகத்தில் முரசொலி அறக்கட்டளை நிர்வாகம் சார்பில் நடைபெறுகிறது.

முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்.

முரசொலி செல்வம் அவர்களின் 'சிலந்தி' கட்டுரைகள் நூலை, கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வெளியிடுகிறார்.



முதல் நூலை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் இந்நிகழ்ச்சிக்கு முன்னிலை வகிக்கிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நன்றி கூறுகிறார்.

இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், மேயர்கள், துணை மேயர்கள், நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர். அனைவரும் வருகை தந்து நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு முரசொலி அறக்கட்டளை நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

**முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய 'சிலந்தி' கட்டுரைகள் நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 'சிலந்தி' என்ற பெயரால் அண்ணன் முரசொலி செல்வம் அவர்கள் எழுதிய கட்டுரைகள் - அன்று முதல் இன்று வரை நமக்கு மட்டுமல்ல, அரசியல் ஆர்வலர்கள் அனைவருக்கும் பாடமாக அமைந்தது.**

**பொதுவாகச் சிலந்தி வலையைத் தொட்டால் அறுத்துவிடலாம். ஆனால் செல்வம் அண்ணனின் வாதங்கள் நைலான் நரம்பு வலை போலத்தான் இருக்கும். யாராலும் மறுத்து அறுத்துவிட முடியாது. அந்தளவுக்கு வலிமையான வாதங்கள் வன்மையான எழுத்துகளால் வைத்து வந்தார்.**

**தி.மு.க.வைப் பற்றியோ - தலைவர் கலைஞரைப் பற்றியோ - என்னைப் பற்றியோ - ஏதாவது சிறு விமர்சனம் வந்தாலும் உடனடியாக செல்வம் அண்ணன் பேனாவைத் தீட்டி விடுவார். எங்கள் மீது சிறுதுரும்பு விழவும் விடமாட்டார். அந்தளவுக்குக் கழகத்தையும் - எங்களையும் போற்றிப் பாதுகாத்தவர் செல்வம் அண்ணன் அவர்கள். அவர் எழுதிய கட்டுரைகள் அவரைப் போலவே கம்பீரமானவை" எனக் குறிப்பிட்டுள்ளார்.**

---

## முறையாக அனுமதி பெற்று மக்கள் சந்திக்கக்கூடிய இடம்:

# திருச்சியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு மாற்று இடத்தில் சிலை!

## சட்டப்பேரவையில் அமைச்சர்கள் கே.என்.நேரு - மு.பெ.சாமிநாதன் உறுதி!

**சென்னை, ஏப்.24-**

**சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது திருச்சியில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிலை திறப்பு குறித்த விவாதம் வருமாறு:-**

**முனைவர் த.இனிகோ இருதயராஜ்:** திருச்சிராப்பள்ளி பாலக்கரை பிரபாத் திரையரங்கம் அருகில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு நிறுவப்பட்ட சிலையைத் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் மு.பெ.சாமிநாதன்:** தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க அனுமதி கோருகிறேன்.

உறுப்பினர் டாக்டர் இனிகோ இருதயராஜ் அவர்கள், திருச்சிராப்பள்ளி பாலக்கரை பிரபாத் திரையரங்கம் அருகில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சிலை திறக்கப்படுமா என்ற வினாவினை எழுப்பியிருக்கிறார்கள்.

தற்போது மட்டுமல்ல, உறுப்பினர் அவர்கள் என்னைப் பார்க்கின்ற ஒவ்வொரு முறையும் இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் கேட்பார்கள். நானும் சிலைக்கும், செய்தித் துறைக்கும் எந்த தொடர்பும் இல்லையென்று அவரிடத்தில் ஏற்கெனவே, பல முறை பதில் தெரிவித்திருக்கிறேன். ஒரு அமைப்பின் மூலமாக, நடிகர் சங்கத்தின் சார்பாக, ரசிகர் மன்றத்தின் சார்பாக அந்தச் சிலை வைக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. மேலும் சொல்லவேண்டுமானால், உள்ளூர் அமைச்சராக இருக்கிற நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், கே.என். நேரு அவர்கள் தான் அங்கு அந்தச் சிலையை அமைப்பதற்காக நிதியை அளித்திருப்பதாக அதிகாரிகள்மூலம் தகவல் தெரிவிக்கப்படுகிறது. எனவே, அந்தவகையில் அவ்விடத்தில் சிலை நிறுவப்பட்டிருக்கிறது. அந்தச் சிலையைத் திறக்கமுடியவில்லை. காரணம், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. நெடுஞ்சாலையில் பொது விடங்களில், சாலைகளில் சிலைகளை அமைப்பது, உச்ச நிதிமன்றத்தால் தடை செய்யப்பட்டிருக்கிறது.





நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் ரசிகர் மன்றத்தைச் சேர்ந்தவரும்கூட நீதிமன்றத்திற்கு சென்றபோது அந்த மனு உயர் நீதி மன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இப்படி இருக்கும் பட்சத்தில் *cover* செய்யப்பட்டு, கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், றுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி நிர்வாகத்துடன் கலந்துபேசி, தக்க இடத்தைத் தேர்வு செய்து, அந்தச் சிலை மாற்று இடத்தில் நிறுவப்பட்டு, சிலை திறப்பதற்கான நடவடிக்கைத் துறையின் சார்பில் எடுக்கப் படும்.

**முனைவர் த. இனிகோ இருதயராஜ்:** நடிப்பாற்றல் திறனால், உலகெங்கும் வியாபித்திருக்கும் தமிழர்களின் மனங்களிலே வாழ்கின்ற தமிழ்நாட்டிலுள்ள ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த, சுதந்திரப் போராட்ட தியாகியின் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டினுடைய *Super Star* ஆக விளங்கியவர்தான் கணேசமூர்த்தி என்கிற நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள். தமிழ்நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சரும், நம்மையெல்லாம் வழிநடத்திக் கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் புரட்சிகரமான வசனங்களை உயிர்பெற வைத்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள். இத்தகைய பெருமைக்குச் சொந்தக்காரரான நடிகர் திலகம் வாழ்ந்த ஊர், எனது தொகுதியான திருச்சி சங்கிலியாண்டபுரம். அவர் நாடகக் கலையை கற்று நடிக்க ஆரம்பித்த ஊர் திருச்சி. எனவே, அவருடைய புகழைப் பரப்புகின்ற வகையிலே அவருடைய திருவுருவச் சிலையை திருச்சியில் நிறுவ வேண்டும் என்பது அவருடைய ரசிகர்களின் நீண்டகால கனவு மற்றும் ஆசையாகும். அந்த ஆசையை நிறைவேற்றுகின்ற வகையில், திருச்சி மாநகராட்சியுடன் தீர்மானத்துடன்தான் 9 அடி கொண்ட முழு உருவ திருவுருவ வெண்கலச் சிலையை சுவாமி மலை ஸ்தபதி ஸ்ரீகண்டன் அவர்களை அழைத்து, சிலை செய்ய சொல்லி, அதற்கான முழுச் செலவையும் ஏற்றுக்கொண்டவர் நகராட்சித் துறை அமைச்சர் நேரு அவர்கள். ஆட்சி மாற்றத்தின் காரணமான அவர்கள் வாங்கிக் கொடுத்தார் என்பதற்காகவும், பத்து ஆண்டுகளாக ஒரு மாபெரும் கலைஞனுடைய சிலையை திறக்காமல், சாக்கு பையால் மூடப்பட்டு கிடக்கிற ஒரு கொடுமையான சூழ்நிலை. சிவாஜி மன்றத்தைச் சேர்ந்த சீனிவாசன் மோகன் பாலாஜி என்பவர்

2018ல் தொடர்ந்த வழக்கில், மதுரை உயர் நீதிமன்றம் என்ன அறிவுறுத்தியிருக்கிறது என்றால், சிலையை நகரின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நிறுவி, மரியாதை செலுத்த வேண்டும் என்று அறுவுறுத்தியிருக்கிறது. எனவே, இச்சிலையை இப்போதுள்ள பாலக்கரை ரவுண்டானா பகுதி கால்நடை மருத்துவமனைக்கு அருகிலோ. . .

அல்லது சத்திரம் *bus stand* பகுதியிலோ, காமராஜர் சிலை பின்புறமோ *Sona Mina theatre* அருகிலுள்ள *roundtana* பகுதியிலோ அமைத்துத் தர வேண்டும்.

**அமைச்சர் மு.பெ. சாமிநாதன்:** உச்ச நீதிமன்றத்தின் அறிவுரையின்படி, ஏற்கெனவே முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் அன்றைக்கு நான் நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தபோது, அதற்கான *NOC* தடையில்லா சான்றிதழில் நானும் கையெழுத்திட்டேன். கடற்கரை சாலையிலே வைக்கப் பட்டது.

காமராஜர் ஐயா பெயர் உள்ள சாலையில், *DGP office* அருகில் வைக்கப்பட்டது. அதன் பிறகு, உச்ச நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் அந்தச் சிலையை எடுக்க வேண்டிய சூழ்நிலையாகிவிட்டது. நீதிமன்றத்திற்கு நாம் கட்டுப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியது. எனவே, உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அந்தச் சிலையை கொண்டு சென்று மணிமண்டபத்தில் மாற்றி வைக்கப்பட்டது. அதன்பிறகு, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, முதலமைச்சர் அவர்கள், ஒருமுறை அந்தச் சிலையைப் பார்த்துவிட்டு சிலை பழுதடைந்திருக்கிறது. புதிய சிலை வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். புதிய சிலை செய்து, சிறப்பாக அது மணிமண்டபத்தின் வெளியில், மக்கள் பார்வைபடக்கூடிய வகையில் வைக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட்டு, ஆண்டுதோறும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. எனவே, முத்தமிழறிஞர் ஐயா கலைஞராக இருந்தாலும்சரி, இன்றைய முதலமைச்சர் அவர்கள் அண்ணன் தளபதியாக இருந்தாலும்சரி, நம்முடைய நடிகர் திலகம் சிவாஜி கணேசன்மீது பற்றுகொண்டவர்கள். ஒரு குடும்ப பாசத்தோடு அவர்கள் இருவரும் இருந்தவர்கள். எனவே, அந்த வகையிலே திருச்சியிலே முறையாக முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று, மக்கள் சந்திக்கக்கூடிய, அதிகம் பார்க்கக்கூடிய இடமாகத் தேர்வு செய்யப்பட்டு, உள்ளாட்சித் துறை, மாநகராட்சியினுடைய தீர்மானத்தைப் பெற்று, மறுதீர்மானத்தைப் பெற்று மாவட்ட நிர்வாகத்தினுடைய ஒத்துழைப்போடு உரிய இடத்தில் முதலமைச்சர் அவர்களிடத்தில் கலந்தாலோசித்து, முறையாக சிலை நிறுவப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேருந்து நிலையத்திலிருந்து மார்க்கெட் பகுதிக்கும், அரசு ஊழியர்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதிகளான என்.ஜி.ஓ. காலனி, பெருமாள்புரம் ஆகியவற்றில் மக்கள் நெருக்கம் இருப்பதால், அந்தப் பகுதிகளுக்கு *mini buses* அதிகமாக தேவைப்படுகின்றன. அப்பகுதிகளுக்கு *mini buses* இயக்குவதற்கு அரசு முன்வருமா என்பதைக் கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடங்களை மிகத் தெளிவாக எழுதிக் கொடுப்பாரேயானால், அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்து, விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.


**தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம்**
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு

| ஒப்பந்த விவரக் குறிப்பீடு எண் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் | பணியின் விவரம் |
|---|---|---|
| 09 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | High Performance Grinding Rollers and Bull Ring Segments for HP 803 Bowl Mills |
| 10 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | Electronic Drum level indicator |
| 11 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - I | Design Manufacturing Supply of Tubes and Bends for LTHS Coils |
| 15 | மே.பொ. / கொ&நி / வ.செ.அ.மி.நி - 2 | Supply and Erection of SS pipes and Fittings of unit II |

மின்னணு (e-tender) ஒப்பந்தப்புள்ளிகளின் பணி / பொருட்கள் சமர்ப்பிக்கும் / திறக்கப்படும் கடைசி நாள் மற்றும் இணையதளத்தில் காண பதிவிறக்கம் செய்யும் நாள் / நேரம் போன்ற முழு விவரங்களுக்கு கீழ்க்கண்ட இணையதளங்களை காணவும்: **www.tangedco.gov.in, www.tntenders.gov.in, www.tenders.tn.gov.in**

செ.ம.தொ.இ/1677/ஒப்பந்தப்புள்ளி/2025


---

# கலைஞரின் "இனியவர்", கழகத்தின் செல்வம்!



**அண்ணன் முரசொலி செல்வம் அவர்களின் 85 ஆவது பிறந்த நாள் இன்று ( 24.4.2025 ) ! 2024 அக்டோபர் 10 அன்று இரவு படுக்கச் சென்றவர், நமையெல்லாம் பரிதவிக்கவிட்டுப் பறந்தே போய்விட்டார். அவர் நாம் திகைக்கவும், தேம்பவும் திடீரென மறைந்துவிட்டாலும், 'முரசொலி'யும், அதன் உயிரான கழகமும் வாழும் நாள்வரை, அண்ணன் செல்வம் அவர்களின் திருப் பெயரும், பெருமையும், மாறாது, மறையாது, மாயாது, தேயாது !**

தம் தமக்கையின் மகனான - அண்ணன் செல்வம் அவர்களுக்கு, "பன்னீர் செல்வம்" என்று பெயர் இட்டழைத்தார் கலைஞர்.

இலண்டனில் பிரிட்டன் அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த இந்திய அமைச்சரின் ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்த நீதிக் கட்சியின் தளபதி சர் ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்கள், 1940 மார்ச் 11 அன்று பதவியேற்றிட வேண்டும் என்பதற்காக, மார்ச் முதல்நாள் புறப்பட்டுச் சென்ற விமானம் கடலில் விழுந்தது; நீதிக் கட்சி நீங்காத சோகக் கண்ணீர்க் கடலில் மூழ்கியது. நம் முன்னோரிடையே கப்பிய சோகம் சற்றும் சுருங்காமலும், கொஞ்சமும் கரையாமலும் நகர்ந்து கொண்டிருந்த அந்தக் காலக் கட்டத்திலேதான், 1940 ஏப்ரல் 24ல் பிறந்தார் அண்ணன் செல்வம். அதனால் அவருக்கு, சர்.ஏ.டி. பன்னீர் செல்வம் அவர்களின் நினைவாக, பன்னீர் செல்வம் எனப் பெயர் சூட்டினார் கலைஞர்.

சர்.ஏ.டி.பன்னீர் செல்வம், ஓமான் கடலில் திடீரென வீழ்ந்து மூழ்கிய விமானத்தோடு மறைந்தார். முரசொலி செல்வம் அவர்களை, சாவுக் கடல் திடீரென, யாரும் சற்றும் எதிர்பாராத வகையில், வாரி இழுத்து விழுங்கிக் கொண்டுவிட்டது.

**"கிழக்கினில் கிளம்பிய காலைக் கதிரவன், வெடுக்கென வீழ்ந்தான் கடலில் என்றால், வையம் கலங்காதோ? வாடி வதங்காதோ?" என்று, சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் அவர்களின் மறைவு குறித்து, மிக இளம் வயதிலேயே கலைஞர், கண்ணீர்க் கவிதை எழுதினார்! அந்தக் கண்ணீரும், கவிவரிகளும், முரசொலி செல்வம் அவர்களின் மறைவுக்கும் பெருமளவு பொருந்தும் அன்றோ !**

1942ல், பதினெட்டு வயதிலேயே, "முரசொலி" ஏட்டினைத் தொடங்கித் தொடர்ந்து நடத்திய கலைஞர், அதன் நிறுவனரும், ஆசிரியரும் ஆனார். அண்ணா அமைச்சரவையில் கலைஞர் இடம் வகித்ததால், அண்ணன் மாறன் அவர்கள் ஆசிரியர் ஆனார். அவர் ஒன்றிய அமைச்சரானதும், முரசொலியின் ஆசிரியர் ஆனார் அண்ணன் செல்வம் அவர்கள். இவ்வாறு கலைஞரும், மாறனும் அமர்ந்திருந்த ஆசிரியர் ஆசனத்தில் அமர்ந்திருந்தவர் செல்வம்! **முரசொலியின் நீண்ட சரித்திரத்தில், "முரசொலி" எனும் பட்டப் பெயருடன் இருவர் மட்டுமே; ஒருவர் முரசொலி மாறன், மற்றொருவர் முரசொலி செல்வம் ! கலைஞரின் மனசாட்சி மாறன்; முரசொலியின் மனசாட்சி செல்வம் !**

வாழையடி வாழையாக ஆசிரியர் பொறுப்பை ஏற்றிருந்தவர் அண்ணன் செல்வம் என்றாலும், திராவிட இலட்சியத்தின் மேன்மையையும், அதனை அடைந்திட மேற்கொள்ள வேண்டிய உழைப்பின் அளவையும், ஆழத்தையும் அறுதியிட்டு அறிந்திருந்தவர் அவர். அதனை அவர், **"இலட்சியமென்பது எட்டிப் பறித்திடும் மல்லிகை அல்ல; எதிர் நீச்சல் ! எரிமலை மேல் கொடி நாட்டல்"** என்று, பொறுப்பின் நெருப்பன்ன தன்மையினை எடைபோட்டுச் சொல்லியிருக்கிறார். அவரே சொன்னபடி, எதிலும், எப்போதும், எச்சரிக்கையாகவும், கனிவும், இனிமையும் கடுகளவும் குறைந்திடாமலும், முரசொலி ஆசிரியர் பொறுப்பை முழுமையாக நிறைவேற்றி வந்தார்.

அண்ணன் செல்வம் அவர்கள் முரசொலி ஆசிரியராக, எண்ணற்ற முறை எதிர் நீச்சல் போட்டிருக்கிறார்; இன்முகத்துடன், எரிமலை மீதேறியிருக்கிறார். நெருக்கடி நிலை காலத்தில், எழுத்து சுதந்திரம் காத்திடும் ஜனநாயகப் போரில் கலைஞருடன், முரசொலி செல்வம் அவர்களும் கைது செய்யப்பட்டுத் திருவல்லிக்கேணி காவல்நிலையத்தில் வைக்கப்பட்டார். திருச்செந்தூர் 'சுப்பிரமணிய சம்ஹாரம்' எனப்படும், அறங்காவல் துறை அதிகாரி சுப்பிரமணிய பிள்ளையின் மர்மச்சாவு தொடர்பான 'பால் கமிஷன்' அறிக்கை வெளியானதில், அண்ணன் செல்வம் அவர்கள், காவல் துறையினரின் கடும் அத்து மீறல்களுக்கு ஆளாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார்.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் உரிமைப் பிரச்சினை தொடர்பாக ஒருமுறை கைது செய்யப்பட்டார். அந்தக் கைதுதான், சட்டமன்ற வரலாற்றிலேயே இல்லாத, பொல்லாத புதுமையாக, நவீன கொடுங்கோல் நிகழ்வாக, புதியதாக உருவாக்கப்பட்ட கூண்டொன்றில் ஏற்றி, 'கண்டனம்' வாசிக்கும் வரை நீண்டது; அப்படி நீண்டதால், நிலையான சரித்திர அத்தியாயத்தை உருவாக்கி, பேரவைக்கும், அண்ணன் செல்வம் அவர்களின் வாழ்க்கைக்கும் சேர்த்தது.

**"வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக்குள் செல்வம் நின்றிருந்தால், என்னகம் வாடிப் போயிருக்கும்! அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்துணைப் பொருத்தமாக அப்போதே வைத்தேன் என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன் - படத்தில் செல்வத்தின் முகத்தில் அரும்பி நிற்கும் புன்முறுவல் கண்டு!... கூண்டு கண்டேன்; குதூகலம் கொண்டேன்"** என்ற கலைஞரின் கடிதம், கழகக் கருவூலத்தின் அங்கம் !

அந்தக் கடிதத்திலேயே; அஞ்சுகத் தாயார் கலைஞரிடம் **'உனக்கு ஒரு பெண் பிறந்தால், அதற்கு செல்வி எனப் பெயரிட்டு செல்வத்துக்கே துணைவியாக்க வேண்டும்'** என்று அன்புக்கட்டளை பிறப்பித்ததையும்; அண்ணன் செல்வம் அவர்கள், கடமை கண்ணியம் கட்டுப்பாடு காத்த பண்பாட்டையும்; அறிஞர் அண்ணா அவர்கள், **"செல்வா"** என அன்பொழுக அழைத்து வந்த பழக்கத்தையும்; அவர் மூலம் முரசொலிக்குத் தேவையான அறிவுரைகளைச் சொல்லி அனுப்பியதையும்; அண்ணா அவர்கள் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் செல்வம் அவர்களைக் காண நாட்டம் கொண்டு, அவரை அருகழைத்து அன்பைப் பொழிந்ததையும், அவருக்கே வாய்த்த சொக்க வைக்கும் தமிழில் சுட்டிக் காட்டியிருக்கிறார் கலைஞர் !

**"போற்றுதலுக்குரிய கலைஞரும், மரியாதைக்குரிய மாறனும் இல்லாத நிலையில், அவர்களது இடத்தில் இருந்து வழிநடத்தும் அன்புக்குரியவராக செல்வம் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை, எனக்குக் கிடைத்த பெருமையாக நினைக்கிறேன்"** என்றார் நமது திராவிட நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்பு. **" தி.மு.க.வைப் பற்றியோ, கலைஞரைப் பற்றியோ, என்னைப் பற்றியோ, ஏதாவது விமர்சனம் வந்தாலும், உடனடியாகப் பேனாவைத் தீட்டி விடுவார் அண்ணன் செல்வம்!"** என்று இப்போதும் குறிப்பிட்டுள்ளார் அவர்!.

**அண்ணன் செல்வம் அவர்கள், முரசொலியோடு வளர்ந்தவர், முரசொலியை வளர்த்தவர். முரசொலிக்கு ஆற்றும் பணியை, கலைஞருக்கு நேரடியாக ஆற்றும் பணியாகக் காலமெல்லாம் ஆர்ப்பாட்டமின்றி, அமைதியாக, ஆற்றலுடன் ஆற்றியவர். கலைஞரை ஆசானாகக் கொண்டு, முரசொலியைப் பாடமாகப் படித்தவர், பயிற்றுவித்தவர். அவரால் பலன் பெற்றோர் பல்லாயிரம். இரக்க குணமும், இனிய பண்பு நலன்களும், இமாலயத் தலைவரின் மருமகன் ஆயினும் இமைப் பொழுதும் கர்வப் படாத இயல்பும், அவர் சராசரி மனிதர் அல்ல, மிகமிக உயர்ந்த மனிதர் என்பதை திராவிட உலகுக்கு உணர்த்தும் !**

சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களைத் **" திராவிட ரத்தினம்"** என்றார் அண்ணா. கலைஞர் அவர்களால் - பாசத்தோடும் நேசத்தோடும் வளர்த்து ஆளாக்கப்பட்டு, **" இனியவன் என் செல்வம்"** என நெகிழ்ச்சியுடன் போற்றப்பட்ட முரசொலி செல்வம் அவர்களைக் **"கழகத்தின் ரத்தினம்"** என்றழைப்பது எவ்வளவு பொருத்தம் !

**கி.இராஜமாணிக்கம்**